**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாள் புதன் கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 04 ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண்.177/2025**
(CNR.No.TNTS07-000457-2025)
********

சரஸ்வதி ... வாதி

/எதிர்/

சுந்தர்ராஜ் ...பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதிமன்றம் முன்பு இன்று இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.எஸ்.மாலாதேவி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.எஸ்.ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவம் இல்லாமலும், பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாமலும், எதிருரை தாக்கல் செய்யாமலும் இருந்து வந்ததால் ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டும், வாதி தரப்பில் முன்னிடப்பட்டிருக்கும் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதுரையை கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

இந்த வழக்கானது, தாவா தொகையான ரூ.2,90,067/-ம், அதன் அசல் தொகைக்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை பின்வட்டியுடன் செலுத்தக்கோரியும், தவறும் பட்சத்தில்

தாவா அடமான சொத்தினை நீதிமன்றம் மூலமாக ஏலத்திற்காக கொண்டு வந்து வாதியின் கடன் தொகையை வசூல் செய்து கொள்ளும் பொருட்டு ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், பிரதிவாதி மீது தனிநபர் தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதியின் வழக்குரையின் சுருக்கம்**:-

பிரதிவாதி அவரின் குடும்ப அவசிய செலவுக்காக வேண்டி வாதியிடம் ரொக்க கடனாக ரூ.2,00,000/-யை கடந்த 26.07.2021 ஆம் தேதியில் பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ.1/- வீத வட்டி சேர்த்து கூடுகிற வட்டியை மாதம் தோறும் ரொக்கம் கொடுத்து ரசீது பெற்று வந்து அசல் தொகையை மூன்று வருட வாய்தாவான 26.07.2024 ஆம் தேதிக்குள் ரொக்கம் செலுத்தி அடமானத்தை மீட்டுக்கொள்வதாக ஒப்புக்கொண்டு தபசில் சொத்தை ஈடுகட்டி 26.07.2021 ஆம் வாதியில் வாதி பெயருக்கு ஒரு அடமான ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ளார். ஆனால் பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி நாளது தேதிவரை அடமான தொகையான அசலுக்கோ, வட்டிக்கோ யாதொரு தொகையும் செலுத்தவில்லை. பின்பு பிரதிவாதியிடம் நேரிலும், ஆட்கள் மூலமும் கேட்டும் பிரதிவாதி செலுத்தவில்லை. எனவே வாதி அவரது வழக்கறிஞர் மூலம் தாவா அடமான தொகையை கேட்டு 25.03.2025 அன்று வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார். மேற்படி அறிவிப்பை 26.03.2025 ஆம் தேதியன்று பெற்றுக்கொண்டு பிரதிவாதி யாதொரு பதில் அறிவிப்பு அனுப்பாமலும், மேற்படி தொகையினைசெலுத்தாமலும் இருந்துள்ளார். எனவே தாவா தொகையை பிரதிவாதியிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்த நிலையிலும், பிரதிவாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவம் இல்லாமலும், பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாமலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் இருந்து வந்ததால் ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டுள்ளார்.

4. இவ்வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய விஷயம் என்னவெனில், *பிரதிவாதி, வாதிக்கு ரூ. 2,90,067/-ம் திருப்பி செலுத்த கடமைப்பட்டுள்ளாரா?* என்பதும், *வாதிக்கு அவர் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதா?* என்பதுமேயாகும்.

5. வாதி தரப்பில், வழக்கு வாதியான சரஸ்சதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ஷையார் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் யாதொரு சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிறுத்தப்படவில்லை. வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. **தீர்வு**:

இந்த வழக்கானது, தாவா தொகையான ரூ.2,90,067/-ம், அதன் அசல் தொகைக்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை பின்வட்டியுடன் செலுத்தக்கோரியும், தவறும் பட்சத்தில் தாவா அடமான சொத்தினை நீதிமன்றம் மூலமாக ஏலத்திற்காக கொண்டு வந்து வாதியின் கடன் தொகையை வசூல் செய்து கொள்ளும் பொருட்டு ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், பிரதிவாதி மீது தனிநபர் தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், வா.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 26.07.2021 ஆம் தேதியில் பிரதிவாதி வாதியை அணுகி ரூ.2,00,000/-ம் கடனாக பெற்றுள்ளார் என்றும், மேற்படி கடன் தொகைக்கு ஈடாக தபசில் கண்ட சொத்தை அடமானம் பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

8. மேலும், வாதி தரப்பு சான்றாவணங்களில், வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலிக்கையில், பிரதிவாதி வாதியிடம் ரூ.2,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு, அத்தொகைக்கு

கடந்த 26.07.2021 ம் தேதியன்று தாவா அடமான ஆவணத்தை தாவா சொத்தினைப் பொறுத்து பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் மேற்படி அடமான கடனை திரும்ப செலுத்தக்கோரி பிரதிவாதிக்கு, வாதியால் பதிவு வழக்கறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும், மேற்படி அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பாமலும், மேற்படி கடன் தொகையை செலுத்தாமலும் இருந்து வந்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது.

9. மேலும், இந்த வழக்கில், பிரதிவாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவம் இல்லாமலும், பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாமல் இருந்து வந்ததால் ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மறுக்கப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

10. எனவே மேற்படி வாதி தரப்பு வா.சா.1 ன் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்ததிலிருந்து, பிரதிவாதி, வாதியிடம் ரூ.2,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு, அத்தொகைக்கு கடந்த 26.07.2021 ம் தேதியன்று வா.சா.ஆ.1 அடமான ஆவணத்தை பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

11. எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, பிரதிவாதியால், வாதிக்கு வா.சா.ஆ.1 ஆன தாவா அடமான ஆவணமானது சரியான பிரதிபிரயோசனத்திற்குதான் பிறப்பித்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதால் பிரதிவாதி, வாதிக்கு ரூ.2,90,067/-ஐயும், மேற்படி தொகைக்கு பின்வட்டியுடன் சேர்த்து திரும்ப செலுத்தக் கடமைப்பட்டவர் என்றும், வாதி கோரியபடி அடமான முதல்நிலை தீர்ப்பாணையும், பிரதிவாதியைப் பொறுத்து மட்டும் தனி நபர் தீர்ப்பாணையும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும் தீர்மானித்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

12. இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதி கோரியுள்ள தாவா தொகையான ரூ.2,90,067/-ம், மேற்படி தொகைக்கு பிராது தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரைக்கும் 9% வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரைக்கும் 6% பின்வட்டியும் சேர்த்து பிரதிவாதி, வாதிக்கு இரண்டு மாத காலத்திற்குள் செலுத்தவேண்டுமென்று பிராது தபசில் சொத்துக்களின்பேரில் ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், தாவா தொகைக்கு தபசில் சொத்துக்கள் காணாதபட்சத்தில், பிரதிவாதி மீது மட்டும் தனிநபர் தீர்ப்பாணை பிறப்பித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P Digitally signed by MAHINDRAVARMA P Date: 2026.03.18 20:18:30 -0300

சார்பு நீதிபதி,

சங்கரன்கோவில்.

**வாதி தரப்பு சாட்சிகள்:**

1. திருமதி.சரஸ்வதி (வாதி)

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:** இல்லை

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.07.2021 | தேதிய அடமான ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.2 | 25.03.2025 | வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 26.03.2025 | அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை |

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:** இல்லை

MAHINDRAVARMA P Digitally signed by MAHINDRAVARMA P Date: 2026.03.18 20:18:36 -0300

சார்பு நீதிபதி,

சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**அசல் வழக்கு எண்.177/2025**

**தீர்ப்புரை (அசல்/வரைவு)**

**நாள் 18.03.2026**